# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**ஆணை நாள். 06.10.2026**

**முன்னிலை**

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : SA-3351/A/2024**

திரு.பெ.அரவிந்தன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.பெ.அரவிந்தன் அவர்கள் QR Code Meeting link மூலம் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.சு.இராஜகுமாரன், பொதுத் தகவல் அலுவலர் / அரசு சார்புச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)–ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆணையம் இதனை பதிவு செய்கின்றது. பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகவில்லை எனில் அவருக்கு நிகரான பணிமூப்பில் உள்ள அலுவலரை விசாரணை இயலாமைக்கான காரணங்களை தெரிவித்து, உரிய மேலதிகாரியின் அங்கீகார கடிதம் பெற்று விசாரணையில் ஆஜராக வேண்டும். இந்நிலையில், திருமதி.பொ.கயல்விழி, உதவி பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 21.12.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அரசின் 2023–24 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் பள்ளிக் கல்வி துறை தொடர்பாக

பல்வேறு துறைகளின் கீழ் செயல்படும் பள்ளிகள் அனைத்தும் எப்போது பள்ளிக் கல்வித் துறையின் கீழ் கொண்டு வரப்படும் போன்ற விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரி 5 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலர் 26.12.2023 நாளிட்ட கடிதத்தின் படி சட்டப்பிரிவு 6(3)–ன் கீழ் மனுவானது பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம் சென்னை அவர்களுக்கு மாற்றப்பட்டு மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது தகவல் அலுவலர் பதில் அளிக்காத காரணத்தினால் மனுதாரர் 01.02.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 12.03.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான உதவிப் பிரிவு அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 01.10.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க அனைத்து இனங்களுக்கான தகவல்களை உரிய சான்றொப்பமிட்டு, விரைவில் பதிவஞ்சல் மூலம் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனக்கு இதுநாள் வரையில் பொதுத் தகவல் அலுவலர் எவ்வித தகவல்களையும் வழங்கவில்லை எனவும், உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1) மற்றும் 20(2)இன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும், அனைத்து இனங்களுக்கான தகவல்களை உரிய சான்றொப்பமிட்டு வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் உரிய காலத்திற்குள் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது, மேலும், மனுதாரருக்கு, பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்கள் மனுதாரருக்கு அனுப்பப்பட்டதற்கான எவ்வித சான்றும் இவ்வாணையத்தில் பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:–

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காத திரு.ஆ. கோபால், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் ரூ25,000/– தண்டம் ஏன் விதிக்கக்கூடாது மற்றும் பிரிவு 20(2)இன் கீழ் துறை ரீதியான நடவடிக்கை ஏன் மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான ஆகியோரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 03.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.***

- *மனுதாரர் 6(1) மனுவில் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)–ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் விசாரணை அறிக்கை நகலுடன் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 03.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்களுக்கு இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.*

**ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்** SA-3351-A-2024

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

**மனுதாரர்:**
திரு.பெ.அரவிந்தன்
4, எல்டாம்ஸ் சாலை,
ஆழ்வார்பேட்டை,
சென்னை – 600018

Copy to File
Je/PA 06.10.2026